**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. பா. பாலமுருகன், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 08 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**I.A.No. 1/2022 In O.S.No. 52/ 2016**

1) மாரிமுத்து, குடும்ப மேலாளர்

2) சின்னதுரை (எ) முத்து கிருஷ்ணன்

3) நடராஜன்

4) அமிர்தசாமி (எ) சுந்தரம் ..... மனுதாரர்கள்

/எதிர்/

1) மல்லா நாயக்கர்

2) வட்டாட்சியர், கடவூர்

3) வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை

4) மாவட்ட ஆட்சியர், கரூர்

5) ஆணையர், Land Administration, சேப்பாக்கம், சென்னை

..... எதிர்மனுதாரர்கள்

1) பாப்பாத்தி

2) சேகர்

3) நீலாவதி

....... புரோபோஸ்ட் பார்ட்டீஸ்/1 ம் பிரதிவாதியின் வாரிசுகள்

இம்மனு என் முன்பாக 28.10.2022 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு .M. குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துள்ள நிலையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் PP1 முதல் PP3 ஆகியோர்களை தோன்றாத்தரப்பினராகக் கொண்டும் மற்றும் PP1 முதல் PP3 ஆகியோர்களை தோன்றாத்தரப்பினராகக் கொண்டும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## ஆணையுரை

அசல் வழக்கில் இறந்து போன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினராக சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 153 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென பரிகாரம் கோரி காலவரையரைச்சட்டம் பிரிவு 5 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

## மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்

1. மனுதாரர் அசல் வழக்கின் 1ம் வாதி ஆவார். தாவா வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ள போது, 1ம் பிரதிவாதி கடந்த 08.02.2022ம் தேதி இறந்து விட்டார். இறந்து போன 1ம் பிரதிவாதி மல்லா நாயக்கரின் வாரிசுகளை பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், இறந்து போன மல்லா நாயக்கரின் வாரிசுகளை இறந்த 90 நாள்களுக்குள் சேர்க்க மனு செய்திருக்க வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்ய முடியாததினால் 07.05.2022ம் அன்று வழக்கானது அற்றுப் போய்விட்டது. மேற்படி தாமதமானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மன்னிக்கத்தக்கது. எனவே, மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 153 நாள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம்

2. இம்மனு சட்டப்படி நிலைக்கக்கூடியது அல்ல. மனுதாரரின் மனுவில் கண்ட பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. மேற்படி மனு உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் வேண்டுமென்று எவ்வித காரணமின்றி காலதாமதமாக மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளபோது 1ம் பிரதிவாதி கடந்த 08.02.2022 ம் தேதி 1முதல் 3 வரையிலான புரோபோஸ்ட் பார்ட்டிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் என்றும், மேற்படி நபர்கள் இறந்து போன 1ம் பிரதிவாதி மல்லா நாயக்கரின் வாரிசுகள் என்றும், அவர்களை வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கவேண்டும் என்றும், 1ம் பிரதிவாதி இறந்த 90 நாட்களுக்குள் மனுவை மனுதாரரால் தாக்கல் செய்யமுடியவில்லை என்றும், மேற்படி மனுவை தாக்கல் செய்ய 153 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது என்றும், மேற்கண்ட காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என காலதாமதத்திற்கு மனுதாரர்கள் கூறியுள்ள காரணம் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும்படியாகவே உள்ளது. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 08 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- P. பாலமுருகன்

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

| | | |
|---|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

Sd/- P. பாலமுருகன்

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**